
## 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் : தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தேர்தல் பரப்புரைப் பயணம் !



தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கி.வீரமணி அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பரப்புரைப் பயணம் வருமாறு:–

| நாள் | நேரம் | தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் | வேட்பாளர் |
|---|---|---|---|---|
| 07.04.2026 – செவ்வாய் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | விருதுநகர்<br>மதுரை வடக்கு | விருதுநகர்<br>மதுரை வடக்கு | **விஜய பிரபாகர்,** தேமுதிக<br>**கோ.தளபதி,** திமுக |
| 08.04.2026 – புதன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | கம்பம்<br>போடிநாயக்கனூர் | கம்பம்<br>போடிநாயக்கனூர் | **நா.இராமகிருஷ்ணன்,** திமுக<br>**ஓ.பன்னீர்செல்வம்,** திமுக |
| 09.04.2026 – வியாழன் | காலை 9 மணி<br>மாலை 6 மணி<br>இரவு 8 மணி | திண்டுக்கல்<br>திருவெறும்பூர்<br>திருச்சி மேற்கு | திண்டுக்கல்<br>திருவெறும்பூர்<br>திருச்சி மேற்கு | **அய்.பி.செந்தில்குமார்,** திமுக<br>**அன்பில்.மகேஸ்பொய்யாமொழி,** திமுக<br>**கே.என்.நேரு,** திமுக |
| 10.04.2026 – வெள்ளி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | ஜெயங்கொண்டம்<br>குன்னம் | ஜெயங்கொண்டம்<br>குன்னம் | **க.சொ.க.கண்ணன்,** திமுக<br>**சா.சி.சிவசங்கர்,** திமுக |
| 11.04.2026 – சனி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | கிணத்துக்கடவு<br>சூலூர் | கிணத்துக்கடவு<br>சூலூர் | **கே.வி.கே.எஸ். சபரி கார்த்திகேயன்,** திமுக<br>**தளபதி முருகேசன்,** திமுக |
| 12.04.2026 – ஞாயிறு | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | கோபிசெட்டிபாளையம்<br>அந்தியூர் | கோபிசெட்டிபாளையம்<br>அந்தியூர் | **என்.நல்லசிவம்,** திமுக<br>**எம். சிவபாலன்,** திமுக |
| 13.04.2026 – திங்கள் | காலை – 9 மணி<br>மாலை 6 மணி<br>இரவு 8 மணி | சேலம் வடக்கு<br>பாப்பிரெட்டிபட்டி<br>பாலக்கோடு | சேலம் வடக்கு<br>பொம்மிடி<br>பாலக்கோடு | **இரா.இராஜேந்திரன்,** திமுக<br>**முனைவர் பெ.பழனியப்பன்,** திமுக<br>**டாக்டர் டி.என்.வி.எஸ்.செந்தில்குமார்,** திமுக |
| 14.04.2026 – செவ்வாய் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | ஓசூர்<br>பர்கூர் | ஓசூர்<br>பர்கூர் | **எஸ்.ஏ.சத்யா,** திமுக<br>**கே.மதியழகன்,** திமுக |
| 15.04.2026 – புதன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | விருகம்பாக்கம்<br>சைதாப்பேட்டை | விருகம்பாக்கம்<br>சைதாப்பேட்டை | **பிரபாகர் ராஜா,** திமுக<br>**மா.சுப்பிரமணியன்,** திமுக |
| 16.04.2026 –வியாழன் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | செஞ்சி<br>திருவண்ணாமலை | செஞ்சி<br>திருவண்ணாமலை | **கே.எஸ்.மஸ்தான்,** திமுக<br>**எ.வ.வேலு,** திமுக |
| 17.04.2026 – வெள்ளி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | நெய்வேலி<br>குறிஞ்சிப்பாடி | நெய்வேலி ஆர்ச் கேட்<br>குறிஞ்சிப்பாடி | **சபா.இராஜேந்திரன்,** திமுக<br>**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,** திமுக |
| 18.04.2026 – சனி | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | சிதம்பரம்<br>சீர்காழி | சிதம்பரம்<br>சீர்காழி | **தமிமுன் அன்சாரி,** ம.ஜ.க<br>**செந்தில்செல்வன்,** மதிமுக |
| 19.04.2026 – ஞாயிறு | காலை 9 மணி<br>மாலை 6 மணி<br>இரவு 8 மணி | வேதாரண்யம்<br>நாகப்பட்டினம்<br>நன்னிலம் | வேதாரண்யம்<br>நாகப்பட்டினம்<br>நன்னிலம் | **மா.மீ.புகழேந்தி,** திமுக<br>**பேராசிரியர் எம்.ஹெச். ஜவாஹிருல்லா,** மமக<br>**முஹம்மது முபாரக்** எஸ்.டி.பி.அய். |
| 20.04.2026 – திங்கள் | மாலை 6 மணி<br>இரவு 8 மணி | மன்னார்குடி<br>ஒரத்தநாடு | நீடாமங்கலம்<br>ஒரத்தநாடு | **டி.ஆர்.பி.ராஜா,** திமுக<br>**ஆர்.வைத்திலிங்கம்,** திமுக |
| 21.04.2026 – செவ்வாய் | காலை 9 மணி<br>மாலை 4 மணி | பாபநாசம்<br>தஞ்சாவூர் | கபிஸ்தலம்<br>தஞ்சாவூர் | **எ.எம்.ஷாஜகான்,** (இ.யூ.மு.லீ<br>**சண்.இராமநாதன்,** திமுக |

**கலி.பூங்குன்றன்**

துணைத் தலைவர், திராவிடர் கழகம்

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில், போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து

# கடலூர் மாவட்டத்திலுள்ள 9 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர், கழகத் தலைவர் தேர்தல் பொதுக்கூட்டத்தில் சிறப்புரை !

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அழைப்பு !



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் இன்று (07.04.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 04.00 மணியளவில் கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் கடலூர் மாவட்டத்திலுள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம், கடலூர், திட்டக்குடி, விருதாச்சலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய ஒன்பது சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் வெற்றி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து, அவர்களை ஆதரித்து நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்ற உள்ளார்.

அதுசமயம் இக்கூட்டத்தில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் (BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

குறிப்பு:- இறையன்பன் குத்தூஸ் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**

செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

# வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

நாகை, ஏப்.7 -

நாகை மாவட்டம் வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள் கூட்டம் வேதாரண்யத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாகை மாவட்டச் செயலாளர் சிவகுரு பாண்டியன் வரவேற்றார்.மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம்,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தநாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் பி.வி.ஆர்.விவேக், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அம்பிகாபதி, விடுதலைச் சிறுத்தைகள் சுமா செல்வராசு ம.தி.மு.க. கட்சியை சேர்ந்த இளங்கோவன் ஜி.பி.ராமமூர்த்தி, தே.மு.தி.க. மோகன், எஸ்.எம்.ராஜேந்திரன்,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அலி, மனிதநேய ஜனநாயக கட்சி மஜீத், திராவிடர் கழகம் கி.முருகையன், நெப்போலியன்,

பூபேஷ் குப்தா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என்.கௌதமன் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக தீர்மான குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், தலைமைக் கழக வழக்கறிஞர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. மறைமலை, மாவட்ட துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், கற்பகம் நீலமேகம், ஒன்றிய கழக செயலாளர்கள் தலைஞாயிறு மகா.குமார், வேதாரண்யம் கிழக்கு என்.சதாசிவம், வேதாரண்யம் மேற்கு உதயம் வே.முருகையன், தலைஞாயிறு பேரூர் செயலாளர் சி. சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் எல் எஸ் இ பழனியப்பன், உமா செந்தாமரை மற்றும் மாவட்ட சாலை பணிகளின் பொறுப்பாளர்கள் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் இந்நாள் பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் கழகத்தினர் கலந்துகொண்டனர். முடிவில் வேதாரண்யம் நகர கழக செயலாளரும் வேதாரணியம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் மா.மி. புகழேந்தி கலந்துகொண்டு ஏற்புரையாற்றினார்.கூட்டத்தில் தமிழ்நாட்டில் கழக அரசு 7வது முறைபாகவும் தளபதி அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராக்கிட சட்டமன்றத் தேர்தலில் கழகத்தலைவர் தளபதி அவர்களின் கரத்தை உயர்த்தும் வகையில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் மா.மீ.புகழேந்திக்கு அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழகத்தினர் ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு சேகரித்து அதிக வாக்குதல் வித்தியாசத்தில் வெற்றிபெற செய்து வெற்றியை தலைவர் தளபதியிடம் சமர்ப்பிப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

## பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய தி.மு.க.சார்பில்

# பெரம்பலூர் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் ச.த.ஜெயலெட்சுமி அறிமுகக் கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் பங்கேற்பு!

பெரம்பலூர், ஏப். 07-

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டாக்டர் ச.த.ஜெயலட்சுமி அறிமுக கூட்டம் மற்றும் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் கூட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தலைமையில் செட்டிகுளத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் கலந்து கொண்டு வேட்பாளர் டாக்டர் ச.த.ஜெயலெட்சுமியை ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என்று பேசினார்.

இதில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க. சித்தார்த்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி, காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் ராஜேந்திரன், தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் சிவா ஐயப்பன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்டச் செயலாளர் சர்புதின், ம.தி.மு.க மாவட்ட செயலாளர் ஜெயசீலன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர் ஆர். அருண், வ.சுப்ரமணியன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ்,

மற்றும் தி.மு.க. கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.


இந்த கூட்டத்தில் ஆலத்தூர் மேற்கு ஒன்றியம்,குரூர் கிராம அ.தி.மு.க. கிளைச் செயலாளர் விஜயகுமார் தலைமையில் 25 பேர் கிளை கழகத்தை கலைத்துவிட்டு, அக்கட்சியில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தனர்.

அவரை மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் பொன்னாடை அணிவித்து வரவேற்று கட்சியில் இணைத்துக் கொண்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம.பா. செபாஸ்டின்

### ஏப்ரல் 7 (2010)



**1955ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து, கழகத்தில் இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**ஒருங்கிணைந்த சென்னை மாவட்டம், 78வது வட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து முப்பது ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.**

**டெல்லியில் இலங்கை முன்னாள் அதிபர் ஜெயவர்த்தனேவிற்கு முரசொலி மாறன் அவர்களுடன் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பு தெரிவித்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் இவர் உள்ளிட்ட ஐவர்மீது அ.தி.மு.க. அரசினால் போடப்பட்ட பொய் வழக்கில், நீதிமன்றத்தால் கலைஞர் அவர்களுடன் விடுதலை செய்யப்பட்டவர்.**

**1955ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்தபோது, அவரிடம் தேதியுடன் பெற்ற கையெழுத்தை ஐம்பதாண்டுகள் பாதுகாத்து வைத்து, 2005ஆம் ஆண்டு, அவரது கையெழுத்தை காட்டியபோது, கலைஞர் அவர்கள் “உன்னைப் போல நீ இருக்காதே!'' என்று எழுதி கையொப்பமிட்டு வாழ்த்தினார்.**

**இந்தி ஆணை நகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர். ராஜசேகர்

### ஏப்ரல் 7 (2022)



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கிளைக் கழகச் செயலாளர், மதுக்கரை ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**